भारत का राजपत्र

# The Gazette of India

# இந்திய அரசிதழ்

असाधारण

**EXTRAORDINARY**

சிறப்பிதழ்

भाग XV अनुभाग 1

**Part XV Section 1**

பகுதி XV பிரிவு 1

प्राधिकार से प्रकाशित

**PUBLISHED BY AUTHORITY**

அதிகாரத்துடன் வெளியிடப்பட்டது

---

नई दिल्ली, मंगलवार, 11 अप्रैल, 2000/1921 सका

New Delhi, Tuesday, 11th April 2000/1921 Saga

புது தில்லி, 2000, ஏப்ரல் 11ஆம் நாள் செவ்வாய்க்கிழமை/1921 சக

---

**Ministry of Law, Justice and Company Affairs**

(Law Department)

*சட்ட, நீதி மற்றும் நிறும அலுவல்கள் அமைச்சகம்*

*(சட்டத் துறை)*

The translation in Tamil of The Charitable and Religious Trusts Act, 1920 (14 of 1920), The Spices Cess Act, 1986 (11 of 1986), The Indian Fisheries Act, 1897 (4 of 1897), are hereby published under the authority of the President and shall be deemed to be the Authoritative Texts thereof in Tamil under Clause (a) of section 2 of the Authoritative Texts (Central Laws) Act, 1973 (50/1973).

அற மற்றும் சமயப் பொறுப்புக் கட்டளைகள் சட்டம், 1920 (14/1920), நறுமணப் பொருள்கள் மேல்வரிச் சட்டம், 1986 (11/1986) இந்திய மீனளங்கள் சட்டம், 1897 (4/1897) ஆகியவற்றின் தமிழ்மொழிபெயர்ப்பு, குடியரசுத்தலைவரின் அதிகாரத்தின்படி இதன்மூலம் வெளியிடப்படுகின்றன. அதிகாரவுரிமைப்படியான வாசகங்கள் (மையச் சட்டங்கள்) சட்டம், 1973 (50/1973) இன் பிரிவு 2இன் கூறு (அ) வின் படி இவையே தமிழில் அதிகாரவுரிமைப்படியான வாசகங்களாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

Price Rs. 8.00

# நறுமணப் பொருட்கள் மேல்வரிச் சட்டம், 1986

## (சட்ட எண் 11/1986)

[1986, மார்ச் 20]

நறுமணப் பொருட்களின் ஏற்றுமதியை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை நிறைவேற்றும் நோக்கங்களுக்காக, ஏற்றுமதி செய்யப்படுகிற நறுமணப் பொருட்கள் அனைத்தின் மீதும் மேல்வரியை விதிப்பதற்கு வகை செய்வதற்கானதொரு சட்டம்.

இந்தியக் குடியரசின் முப்பத்தேழாம் ஆண்டின் நாடாளுமன்றத்தால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

குறுந்தலைப்பு, அளாவுகை மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், நறுமணப் பொருட்கள் மேல்வரிச் சட்டம், 1986 என்று வழங்கப்பெறும்.

(2) இது, இந்தியா முழுவதையும் அளாவி நிற்கும்.

(3) இது, மைய அரசாங்கம், அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாகக் குறித்திடலாகும் தேதியன்று செல்லாற்றல் பெறும்.

பொருள் வரையறைகள்.

2. இந்தச் சட்டத்தில் தறுவாயின் தேவை வேறானாலன்றி—

(அ) "வாரியம்" என்பது, நறுமணப் பொருள்கள் வாரியச் சட்டம், 1986இன் பிரிவு 3இன் உட்பிரிவு (1)இன்படி அமைக்கப்பட்ட நறுமணப் பொருள்கள் வாரியம் என்று பொருள்படும்;

(ஆ) "வகுத்துரைக்கப்பட்ட" என்பது, இந்தச் சட்டத்தின்படி வகுக்கப்பட்ட விதிகளால் வகுத்துரைக்கப்பட்ட என்று பொருள்படும்;

(இ) "நறுமணப் பொருள்கள்" என்பது, நறுமணப் பொருள்கள் வாரியச் சட்டம், 1986இன் இணைப்புப் பட்டியலில் குறித்துரைக்கப்பட்ட நறுமணப் பொருள்கள் என்று பொருள்படும்;

மேல்வரியை விதித்தலும் ஈட்டுதலும்.

3. (1) நறுமணப் பொருள்களின் மீது ஒரு சுங்கத் தீர்வையானது பெறுமான விகிதப்படி ஐந்து விழுக்காட்டிற்கு மேற்படாமல், மைய அரசாங்கம், அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாக, அவ்வப்போது குறித்துரைக்கலாகும் வீதத்தில் நறுமணப் பொருள்கள் வாரியச் சட்டம், 1986இன் நோக்கங்களைப் பொறுத்தவரை, மேல்வரி என்னும் வகையில் விதிக்கப்பட்டு, ஈட்டப்படுதல் வேண்டும்.

52/1962

(2) உட்பிரிவு (1)இன்படி விதிக்கப்படும் சுங்கத் தீர்வையானது, சுங்கச் சட்டம், 1962இன்படி அல்லது அப்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள பிற சட்டம் எதன்படியும் நறுமணப் பொருள்கள் மீது விதிக்கத்தக்க சுங்கத் தீர்வைக்குக் கூடுதலானதாக இருக்கும்.

52/1962

(3) தீர்வையைத் திருப்பிச் செலுத்துதல், அதன் விலக்களிப்பு ஆகியவற்றுடன் தொடர்புறத்தக்கவை உள்ளடங்கலாக, சுங்கச் சட்டம், 1962 மற்றும் அதன்படி வகுக்கப்பட்ட விதிகள் மற்றும் ஒழுங்குமுறை விதிகளின் வகையங்கள், அந்தச் சட்டத்தின்படி நறுமணப் பொருள்கள் மீது சுங்கத் தீர்வை விதிப்பது மற்றும் ஈட்டுவது தொடர்பாகப் பொருந்துவன போன்றே, இயன்றவரை, அவை மேற்சொன்ன சுங்கத் தீர்வையை விதிப்பது மற்றும் ஈட்டுவது தொடர்பாகவும் பொருந்தும்.

(4) உட்பிரிவு (1)இன்படி விதிக்கப்பட்ட சுங்கத் தீர்வைகளின் நிகரத் தொகைகள், முதலில் இந்தியத்திரள் நிதியத்தில் வரவு வைக்கப்படுதல் வேண்டும் மற்றும் நாடாளுமன்றம், இதற்கெனச் சட்டத்தின் வாயிலாகச் செய்யப்பட்ட ஒதுக்களிப்பின் வாயிலாக நறுமணப் பொருள்கள் வாரியச் சட்டம், 1986இன் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படுவதற்கு, தக்கதென அது கருதலாகிற பணத் தொகைகளை ஈட்டுவதற்காகும் செலவடைகளைக் கழித்த பின்பு, அத்தகைய நிகரத் தொகைகளிலிருந்து அவ்வப்போது வாரியத்திற்குச் செலுத்த வகை செய்யுமாயின், மைய அரசாங்கம் அவ்வாறு செய்யலாம்.

அறிக்கைகளையும், விவர அறிக்கைகளையும் தருவிப்பதற்கு அதிகாரம்.

4. வாரியமானது, நறுமணப் பொருள்களின் ஏற்றுமதியாளர் எவரையும், வகுத்துரைக்கப்படலாகும் புள்ளி விவரம் பற்றிய தகவலையும், பிற தகவலையும், அத்தகைய படிவத்திலும், கால அளவிற்குள்ளும் அனுப்புமாறு வேண்டுறுத்தலாம்.

விதிகளை வகுக்க அதிகாரம்.

5. (1) மைய அரசாங்கம், அதிகார முறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாக, இந்தச் சட்டத்தின் வகையங்களை நிறைவேற்றுவதற்காக விதிகளை வகுக்கலாம்.

(2) குறிப்பாகவும், மேலே கண்ட அதிகாரத்தின் பொதுப்பாங்கிற்குக் குந்தகமின்றியும், அத்தகைய விதிகள், பிரிவு 4இன்படி புள்ளி விவரம் பற்றிய தகவலும் பிற தகவலும் எந்தப் படிவத்தில் மற்றும் எந்தக் கால அளவுக்குள் அனுப்படலாகுமோ அந்தப் படிவம் மற்றும் கால அளவுக்கு வகை செய்யலாம்.

(3) இந்தப் பிரிவின்படி வகுக்கப்படும் விதி ஒவ்வொன்றும், அது வகுக்கப்பட்ட பின்பு, கூடியவிரைவில், நாடாளுமன்ற அவை ஒவ்வொன்றிலும், ஒரு கூட்டத் தொடராகவோ இரண்டு அல்லது அவற்றிற்கு மேற்பட்ட அடுத்தடுத்த கூட்டத் தொடர்களாகவோ மொத்தம் முப்பது நாட்களைக் கொண்ட ஒரு கால அளவிற்கு அது அமர்வில் இருக்கையில், அதன் முன்வைக்கப்படுதல் வேண்டும்; மேலும், மேற்சொன்ன கூட்டத் தொடரை அல்லது அடுத்தடுத்த கூட்டத் தொடர்களை உடனடியாகத் தொடர்ந்து வரும் கூட்டத் தொடர் முடிவடைவதற்கு முன்பு, அத்தகைய விதியில் மாற்றமைவு எதனையும் செய்வதற்கு இரண்டு அவைகளும் ஒத்துக்கொள்ளுமாயின் அல்லது அந்த விதி வகுக்கப்படுதல் ஆகாது என்பதை இரண்டு அவைகளும் ஒத்துக்கொள்ளுமாயின், அதன் பின்பு, அந்த விதி அவ்வாறு மாற்றமைவு செய்யப்பட்ட வடிவத்தில் மட்டுமே செல்திறம் உடையது ஆகும் அல்லது நேர்வுக்கேற்ப, செல்திறம் இல்லாதுபோகும், எனினும், அத்தகைய மாற்றமைவு அல்லது அழித்தறவு எதுவும் அந்த விதியின்படி முன்னதாகச் செய்யப்பட்ட எதனின் செல்லுந்தன்மைக்கும் குந்தமின்றி இருத்தல் வேண்டும்.